திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அங்கு கண்டுபிடிக்கப் பட்ட பானைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது கறுப்பு—சிகப்பு போடப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனல் அந்தச் சின்னம் திராவிட நாடு தனியாக இருந்து மௌரிய நாட்டோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைக் காட்டுகிறதா ? இரண்டு நாடுகளுக்கும் ஏதோ தொடர்பு இருந்திருக்கிறது. அந்தக் காலத்தி லேயே கருப்பு—சிகப்பு ஒரு நாட்டுச் சின்னமாக இருந்திருக்கிறதா என்பதை அரசு ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டிய ஆராய்ச்சிகள். கறுப்பு சிகப்பு நம் வீட்டுப் பானைகளிலே கூட பார்க்கலாம். மிக அதிகமாக சூடு ஏறினல் கறுப்பு நிறம் வரும். அதிகமாகச் சூடு எருவிட்டால் சிகப்பு நிறம் வரும். அங்கே கண்டுபிடிக்கப்பட்ட பானைகளில் சில ஸ்வஸ்டிகா போன்ற வடிவிலும், திரிசூலம், சூரியன் போன்ற வடிவிலும் இருக்கின்றன.

Post-Graduate Examination in Tamil.

172. * THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state : —

(*a*) whether there is any proposal with the Government to make provision for the professors with post-graduate qualification in Science to appear for the Post-graduate examination in Tamil without involving any loss in emoluments or break in service ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறிவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள், தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக்குப் பயில விரும்பினல் ஊதியம்—பணி இழப்பில்லாமல் பயில அரசு வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.